2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்த் தட்டுப்பாடு குறித்தும், வறட்சி நிலவரம் குறித்தும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுகுறித்து இன்னும் அறிக்கை பெறப்படவில்லை. அறிக்கை பெறப்பட்டவுடன் ஒவ்வொன்றாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுகூட தங்களிடத்திலே ஒரு விண்ணப்பம் வைத்தேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசங்கர் அவர்களைப்பற்றி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) அமருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, பேசுங்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அன்புவிலாஸ் இறக்கத்தில் இரண்டு வீடுகளுக்கிடையிலே குடியிருப்புப் பகுதியில் இருக்கக்கூடிய டாஸ்மாக் கடை சம்பந்தமாக. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் பெறப்பட்டவுடன் எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள். (குறுக்கீடு) பதில் பெறப்பட்டவுடன் எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

(ஆ) வால்பாறை பகுதியில் தொடர் மழையால் ஏற்பட்ட பாதிப்பு

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை பகுதியில் கடுமையான மழை பொழிகிறது. மழையின் காரணமாக அங்கே இருக்கக்கூடிய. . .*